(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(7).]

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 சனவரி 24 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 பெப்புருவரி 06, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— சனாதிபதியினால் வழங்கப்பட்ட 2012 பெப்புருவரி 29 ஆம் திகதிய 1747/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2010 நவெம்பர் 22 ஆம் திகதிய 1681/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அரசியலமைப்பின் 44(2) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய 508/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை திருத்தப்பட்டு கைத்தொழில், வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு 2012 ஒகத்து மாதம் 30 ஆம் திகதிய 1773/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2 0 13. 01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2013 பெப்புருவரி 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2908/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 67 (அ) பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும்போது மருத்துவர்களின் தகைமைகள் பரிசோதிக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறான செயல்முறையொன்று இல்லாதிருப்பின், மருத்துவ நிபுணர்களை பதிவு செய்வதற்காக முறைசார்ந்த செயல்முறையொன்றை வகுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) தற்போது தனியார் மருத்துவமனைகளில் மோசடியான விதத்தில் நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 மார்ச்சு 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1645/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலியத்த பிரதேசத்தில் அமைந்துள்ள பெலியத்த பொது வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யாமையினால் இப்பிரதேச விவசாய குடிமக்கள் தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து விரைவில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக எடுக்கும் கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1748/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 இலிருந்து 2011 வரை இலங்கை அரசாங்கம் ஈடுபட்ட சீனக் கருத்திட்டங்களின் எண்ணிக்கையினையும்;

(ii) அக் கருத்திட்டங்களின் பெயர்களையும்;

(iii) ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் முழுப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் சீன உதவியின் பாகத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு கருத்திட்டத்திலும் வேலைக்கமர்த்துமாறு சீனக் கம்பனியினால் தேவைப்படுத்தப்பட்ட சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(ii) சீனத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சீனக் கம்பனிகளின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்குவதற்கான நியாயப்படுத்தல்களையும் வலுவான காரணத்தினையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2213/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டில் தொழில்புரிபவர்களுக்கு அரசினால் 30% பங்களிப்புத் தொகை வழங்கப்படுகின்றதான வீடமைப்புக் கடன் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்,

(ii) இற்றைவரை மேற்படி வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2378/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கையின் அபிவிருத்தியின் பொருட்டும் சர்வதேச ரீதியில் இலங்கையின் நற்பெயருக்குக் கலங்கம் ஏற்படுத்துகின்ற வெளிநாட்டு நிர்ப்பந்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான சர்வதேச ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு சாதகமான இராஜதந்திர தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனும் 2011 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்றோர் யாவர் என்பதையும்;

(iii) இதன்பொருட்டு செலவாகிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வெளிநாட்டு விஜயங்களின் காரணமாக இலங்கைக்குக் கிடைத்த அநுகூலங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2414/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்காக சத்திர சிகிச்சை கையுறைகளை இறக்குமதி செய்கின்ற கம்பனிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒரு கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்டு அதிக விலை குறிக்கப்பட்ட கையுறைகள் தொகையொன்றை அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு வழங்குவதற்காக அனுமதியளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) இவ்வாறு அதிக விலைக்கு கையுறைகளை விற்பனை செய்கின்ற மேற்படி கம்பனியின் பெயர் யாதென்பதையும்,

(iv) அதன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனியின் கையுறைகள் தொகையை கொள்வனவு செய்வதை மருத்துவ வழங்கல் பிரிவு நிராகரித்ததா என்பதையும்;

(ii) மேற்படி கையுறைகள் தொகை அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறைக்கமைய கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்குரிய ஆவணங்களை சபைக்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இதற்காக அனுமதியளித்த அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியல்களுக்குப் புறம்பாக மேற்படி கையுறைகளை கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அத்தகைய கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை மேற்கொண்டவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2491/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) பஹ்ரேனில் சேவை செய்த, அக்மீமன, ஹியாரே, நுகேகந்த பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளுக்குத் தாயான திருமதி மாதுகெட்ட கமகே தர்மவதீ, இவர் வேலை செய்த வீட்டின் எஜமானிப் பெண் பலவந்தமாக கம்பிக் கொக்கிகளை விழுங்கச் செய்ததன் காரணமாக கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில் தற்போது இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சின் கீழ் இயங்குகின்ற "சஹன் பியஸ" காப்புறுதி திட்டதிதின் கீழ் இவர் உரித்துரிமைத் தொகையொன்றை கோரியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சஹன் பியஸ காப்புறுதித் திட்டத்தின் கீழ் திருமதி தர்மவதீக்கு உரித்துரிமைத் தொகையொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2971/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழிலற்ற பட்டதாரிகள் பெரும் எண்ணிக்கையினர் உள்ளபோது அரசியல் செல்வாக்கு காரணமாக 745 பேருக்கு கல்வித் துறையில் பல்வேறு தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அடிப்படை தகமைகளைக் கூட பூர்த்தி செய்யாத இவ்வாறான உத்தியோகத்தர்கள் கல்வித் துறையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால் இன்று அத்துறையில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு கல்வித் துறையில் அரசியல் நியமனங்கள் வழங்கப்படுவதை மேற்பார்வை செய்த அதிகாரிகள் யார் என்பதையும்;

(ii) அறிவு நிரம்பிய பட்டதாரிகள் இருக்கையில் அவர்களுக்கு உரிய நியமனங்களை வழங்காது வேறு அழுத்தங்களின் மீது தொழில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்கூறியவாறு அரசியல் நியமனங்களை வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும்;

(ii) வழங்கப்பட்ட அந்த நியமனங்களை இரத்துச் செய்து, ஏற்படும் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கும்;

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1964/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் பாரிய அளவில் நிலவுகின்றதென்பதையும்;

(ii) மேலே கூறப்பட்டவாறு கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்கள் நிலவுகின்றமை நிர்வாக நடவடிக்கைகளைப் பேணிவருவதற்கு பாரிய தடையாக அமைகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நிலவுகின்ற கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களைத் துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2188/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) நாட்டின் மொத்த கொள்கலன் அசைவையும்;

(ii) ஒவ்வொரு துறைமுகத்தின் ஒவ்வொரு கப்பல் நங்கூரமிடப்படும் பிரதேசத்திலும் நாட்டின் மொத்த கொள்கலன் அசைவை தனித்தனியாகவும்;

(iii) ஒவ்வொரு துறைமுகத்திலும் நங்கூரமிடல் பிரதேசத்திலும் இலங்கையில் கையாளப்பட்ட உள்நாட்டு கொள்கலன்களைத் தனித்தனியாகவும்;

(iv) அடுத்த ஐந்து வருடங்களுக்குமான கொள்கலன் அசைவின் முன்கணிப்பையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) இலங்கைத் துறைமுகங்களில் கையாளப்படும் கப்பல் சரக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவற்றை கையாளுவதற்கான செலவினத்தையும் ஈட்டப்பட்ட வருமானத்தையும் ரூபாய் பெறுமதியிலும்;

(iii) துறைமுக அதிகார சபையினால் ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒவ்வொரு கப்பல் நங்கூரமிடப்படும் பிரதேசத்திலும் கையாளப்பட்ட பொது கப்பல் சரக்குகளின் அளவைத் தனித்தனியாகவும்;

(iv) அதிகப்படியான கப்பல் சரக்கு எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2214/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகள் நிர்மாணிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) இற்றைவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ள மேற்படி மாடி வீடுகளின் எண்ணிகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2418/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.02.11ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த ஒரு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ள விவசாயிகளுக்கு நிவாரணமளிப்பதற்காக மேற்கொள்ளப்படவுள்ள அல்லது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விவசாயிகளுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த மானியம் வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி மானியம் வழங்கப்படும் கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விவசாயிகளுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்தையும்;

(ii) பொருளாதாரத்துக்கு பாரிய சேவையாற்றும் இந்த மக்களுக்கு எரிபொருள் மானியம் வழங்காதிருத்தல் பாரிய அநீதியாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1965/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தின் நாகொட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மலாமுர கால்வாய்க்கு குறுக்காக பாலமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், இது வரை அதன் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இடையில் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிக்காக மேற்படி பாலத்தை துரிதமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மலாமுர கால்வாயின் குறுக்காக பாலத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், மேற்படி பாலத்தின் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2189/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1970 - 1977 ஆண்டுகளின் போதான ஆட்சிக்காலத்தில் பாசிக்குடாவில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்பதையும்;

(iii) கண்டுபிடிக்கப்பட்ட பெற்றோலியத்தின் அளவையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் ஒற்றோபர் 2011 இல் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டதென தற்போதுள்ள பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சர் பிரகடனப்படுத்தினாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கண்டுபிடிக்கப்பட்ட அளவையும்;

(iii) எப்போது அது உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படும் என்பதையும்;

(iv) எண்ணெய், எரிவாயு விலைகள் எப்போது குறைக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2215/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மகிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் வருடமொன்றில் தலா 25 வீடுகளை நிர்மாணிப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகள் அமைந்துள்ள கிராமங்களின் பெயர்கள் யாதென்பதையும்;

(iii) வீடொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2419/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.02.11 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை போக்குவரத்து சேவைகளைப் பேணிவருகின்றவர்களுக்கு மானியம் அளிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலை போக்குவரத்து சேவை வழங்குனர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி மானியம் வழங்கும் முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி மானியம் வழங்கப்படும் கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி போக்குவரத்துச் சேவை வழங்குனர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களுக்கு முக்கியமானதொரு கடமையை ஆற்றும் இவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படாமை பாரிய அநீதியாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 மாச்சு 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1945/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் கட்டுபொத்த நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பேரூந்து தரிப்பு நிலையம் இற்றைக்கு சுமார் பதிநான்கு ஆண்டுகளுக்கு முன்னர் திறந்துவைக்கப்பட்டதென்பதையும்;

(ii) திறந்து வைக்கப்பட்ட நாளிலிருந்து பயன்படுத்தப்படாமையின் காரணத்தினால் 12 விற்பனைக் கூடங்கள் அடங்கிய குறித்த கட்டடம் அழிவடைந்து வருகிறது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பேரூந்து தரிப்பு நிலையத்தையும் விற்பனைக் கூடங்களையும் பயன்படுத்தாது கைவிட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கட்டடத்தை மீண்டும் புனரமைத்து மக்கள் உரிமைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2190/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 10 வருடங்களாக இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களின் எண்ணிக்கையையும்;

(ii) அனைத்து மாகாணசபைகளுக்குமான தேர்தல் ஒரே தினத்தில் நடைபெற்றனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், அவை ஏன் ஒன்றாக நடைபெறவில்லையென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2005 சனவரி 1 முதல் இற்றையத் திகதி வரை நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலுக்குமான மொத்த செலவை தனித்தனியாகவும்;

(ii) அடுத்த மாகாணசபைத் தேர்தலை எப்போது நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இலங்கையின் தேர்தல் முறைகளுள் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறை ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லையென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2216/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மகிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், முதல் ஐந்து ஆண்டுகளில் வட்டியை மட்டும் செலுத்துவதற்கான வசதியைக் கொண்ட வீடமைப்புக் கடன் திட்டமொன்றை உருவாக்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் உரிய வீடமைப்புக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) இதுவரை மேற்படி வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) வீடமைப்புக் கடன் வழங்கப்படும்போது பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2420/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதற்கு எதிராக 2012.02.15 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு தினத்தில் சிலாபம் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கொலை செய்யப்பட்டவரின் பெயர் யாது என்பதையும்;

(iii) இவரின் மரணம் சம்பந்தமான மருத்துவ அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி கொலையைச் செய்வதற்கு உத்தரவிட்ட நபர் யார் என்பதையும்;

(v) மேற்படி கொலை தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2972/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையைக் கூட செலுத்த முடியாதளவுக்கு மத்திய மாகாண சபை பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகை அந்த மாகாண சபையின் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட போதிலும் அந்தப் பணம் ஊழியர்களின் ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு மத்திய மாகாண சபையினால் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இதுவரை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகைக்காக கழிக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு செலுத்தப்பட இருந்த பணத்தை அந்த கணக்குகளில் வரவு வைக்க முடியாமைக்கான காரணம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மத்திய மாகாண சபை ஊழியர்களின் பங்களிப்புத் தொகைகளை இவர்களது ஓய்வூதிய கணக்குகளில் வரவு வைப்பதற்கும்;

(ii) இந்த மாகாண சபையில் நிலவும் நிதி மோசடி தொடர்பாக ஆராய்வதற்கும்;

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3141/ '12

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) படல்கும்புற நகரத்தின் பிரதான வீதியின் இருமருங்கிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு மேலாக இரண்டு மின்கடத்தி நிலையங்களை இணைக்கின்றதான அதிக வோல்ற்றளவு கொண்ட (6600 வோல்ற்) மின்கம்பி முறையொன்று நிறுவப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நகரமொன்றின் மத்தியில் மேலே குறிப்பிட்ட விதத்தில் மின்சாரக் கம்பியை பொருத்தாதிருத்தல் பொதுவான கொள்கை என்பதையும்,

(ii) அவ்வாறு இருக்கும் பொது நகரத்தில் மேற்படி அதிக வோல்ற்றளவு கொண்ட மின்சாரக் கம்பிகளை பொருத்துதல் நகரத்தின் அபிவிருத்திக்கும் நகரவாசிகளுக்கும் பாரிய தடையாகுமென்பதையும்

அவர் ஏற்றுக் கொள்கிறாரா?

(இ) ஆமெனில், மேற்படி அதிக வோல்ற்றளவு கொண்ட மின்சாரக் கம்பிமுறைமை பொருத்தப்பட்டுள்ள வழியை மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3166/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிருவாக சுற்றறிக்கை இல.49/89 இன்படி ஆதனங்களுக்கான இழப்பீடு வழங்குவதற்கு வடக்கு கிழக்கு மகாகாண சபை அமைச்சு நடவடிக்கை எடுத்த போது அந்த அமைச்சின் சிபாரிசுடன் புனர்வாழ்வளிப்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவருக்கும் இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறு செலுத்தப்படவில்லையெனில், செலுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) நட்ட ஈடு செலுத்தப்படாத விண்ணப்பதாரர்களுக்கு குறிப்பிட்ட இழப்பீட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த சந்தர்ப்பத்தில் 49/89 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி வேண்டுகோள் விடுத்தவர்களில் இதுவரை இழப்பீடு கிடைக்காத, பாதிக்கப்பட்டவர்களில் சிலர் நலன்புரி முகாம்களிலிருந்து வந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் மீள குடியமர்ந்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்கூறியவர்களுக்கு துரிதமாக இழப்பீடு வழங்கி அவர்களது வாழ்க்கையை சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்கு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1966/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிக்கப்பட்ட மாற/குடாபான கனிஷ்ட வித்தியாலயம் இற்றைக்கு பத்தாண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது பாடசாலைக்குரிய கட்டடங்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

(iii) பாடசாலைக்குச் சொந்தமான நிலத்தையும் கைப்பற்றுவதற்கு பல்வேறு நபர்கள் முயற்சிக்கின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாற/குடாபான கனிஷ்ட வித்தியாலயத்திற்கு சொந்தமான நிலத்தையும் அதன் கட்டடங்களையும் வேறு பயன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பாடசாலையை பயன்படுத்துவவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2260/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மஹாபொல புலைமைப் பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2487/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள முத்துராஜவெல ஈர நிலத்திற்குரிய காணித்துண்டொன்றை, விற்பதற்கு, குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இக்காணியின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முத்துராஜவெல ஈர நிலத்திற்குரிய காணிகள் தொடர்பாக இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நிறுவனங்களிலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வனுமதியை வழங்கிய உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(v) குறிப்பிட்ட அனுமதி பெறுதல் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ) (i) இன் பிரகாரம் காணி வழங்கல் நடைபெற்றிருப்பின் இக்காணிகளைப் பெற்றவர்களின் முழுப்பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) (i) முத்துராஜவெல ஈர நிலத்துக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக மேற் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுத்தலானது தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தை மீறுவதாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2821/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் போக்குவரத்து அமைச்சின் செயற்பாட்டினையும்;

(ii) இந்த அமைச்சில் கடமையாற்றும் பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக நாட்டில் சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) உரிய பதிவுடன் சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்;

(iii) உரிய பதிவின்றி சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்;

(iv) 2000, 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சேவையிலீடுபடுத்தப்பட்ட தனியார் பஸ்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) கடந்த 8 வருட காலத்தின் போது தனியார் பஸ் கட்டணங்கள் எப்போது திருத்தம் செய்யப்பட்டன என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட பஸ் கட்டண அதிகரிப்புகள் யாவை என்பதையும்

அவர் ஆண்டு வாரியாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1967/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்பு படையணியில் கடமையாற்றுகின்ற படைவீரர்கள் நாளாந்த சம்பளத்தில் சுமார் இருபது வருடங்களுக்கும் அதிக காலமாக கடமையாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) சேவை நிரந்தரமாக்கப்படாமையினால், மேற்படி உத்தியோகத்தர்கள் அவர்களது சேவை தொடர்பில் உறுதியற்ற தன்மையுடன் செயலாற்றுகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாடு பூராவும் கடமையாற்றுகின்ற சிவில் பாதுகாப்பு படையணியிலுள்ள படைவீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு மாவட்டத்திலும் கடமையாற்றுகின்ற மேற்படி படைவீரர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சிவில் பாதுகாப்பு படையணியில் கடமையாற்றுகின்ற படைவீரர்களின் சேவையை நிரந்தரமாக்கி ஓய்வூதியமுள்ள சேவையொன்றாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2324/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் அறிக்கையிடப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வட மத்திய மாகாணத்தில் தீவிரமாக பரவியுள்ள சிறுநீரக நோய்க்கான திட்டவட்டமான காரணங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் மேற்படி நோய் பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி நோயை கட்டுப்படுத்துவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான வசதிகளை கொண்டுள்ள மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் கண்டி பொது வைத்தியசாலையிலும் காணப்படுகின்ற சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய வாட்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) சத்திர சிகிச்சைகளின் பின்னர் தேவையான வசதிகளின் கீழ் அரச மருத்துவமனைகளில் தங்கவைத்துக்கொள்ளக் கூடிய சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) சந்தையில் நிலவுகின்ற தட்டுப்பாடு காரணமாக தற்போது அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்ற சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளை போதியளவில் அரச மருத்துவமனைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2489/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நாடு பூராகவுள்ள 'சாசனாரக்ஷக்க' சபைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஒவ்வொரு 'சாசனாரக்ஷக்க' சபைக்கும் நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வழங்கப்பட்டுள்ள வருடாந்த நிதி ஏற்பாடுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 'சாசனாரக்ஷக்க' சபை எனும் பெயரில் அல்லது அதனையொத்த ஒரு பெயரில் நிதியமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இந்நிதியத்துக்கு நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் முறை யாது என்பதையும்;

(iii) நிதியத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2822/'12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மொத்த சனத்தொகையினையும்;

(ii) 18 வயதிற்கு மேற்பட்டோரின் சனத்தொகையினையும்;

(iii) 18 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையினரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) வாக்குரிமை அகற்றப்பட்டவர்களாகவும், கிரமமாக வாக்களிக்க முடியாமலும் அதிகமான வாக்காளர்கள் இருக்கின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) வாக்காளர் இடாப்புக்களின் இற்றைப்படுத்தலை ஒவ்வொரு வருடத்தினதும் யூன் 1 முதல் யூலை 31 வரையான காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தாமல் அதனை வருடம் முழுவதும் செய்வதற்கு அனுமதிக்கப்படுமா என்பதையும்;

(ii) வாக்களிப்பதை ஒரு கட்டாயமான செயற்பாடாக மாற்றுவது சாத்தியமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?